(ஆ) பேரவை விதிகள் குழு—உறுப்பினர்கள் நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 282-ன் கீழ், 1986–87 ஆம் ஆண்டிற்கான பேரவை விதிகள் குழுவின் உறுப்பினர்களாக, கீழ்க்கண்ட உறுப்பினர்களை நியமிக்கின்றேன் :—

1. மாண்புமிகு முதலமைச்சர்
2. மாண்புமிகு பேரவை முன்னவர்
3. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்
4. மாண்புமிகு சட்ட அமைச்சர்
5. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
6. திரு. உ. சுப்பிரமணியன் (எதிர்க் கட்சித் தலைவர்)
7. திரு. துரை கோவிந்தராசன் (அரசு தலைமைக் கொறடா)
8. திரு. கி. மனோகரன்
9. திரு. அ. செல்வராசன்
10. திரு. கு. ரமணி
11. திரு. பொ. உத்திராபாதி
12. திரு. எ. தெய்வநாயகம்
13. திரு. ஈ.வே.கி. ச. இளங்கோவன்
14. திரு. மா. சுந்தரதாஸ்
15. திரு. இரா. அரிக்குமார்
16. திரு. க. இரா. சின்னராசு

பேரவை விதி 282-ன் கீழ், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவராவார்.

(இ) அவைக் குழு—உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 279 (1)-ன் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை, 1986–87 ஆம் ஆண்டிற்கான அவைக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன் :—

1. திரு. க. பாலசுப்பிரமணியன்
2. திரு. கோ. இரகுபதி
3. திரு. வி. கே. சின்னசாமி
4. திரு. பாப்பா சுப்பிரமணியன்
5. திரு. அ. பெரியசாமி
6. திரு. ஏ. பாலுச்சாமி
7. திரு. எஸ். நாராயணன்
8. திரு. எம். சண்முகய்யா பாண்டியன்

9. திரு. அ. வெங்கடாசலம்
10. திரு. க. சோலைராசு
11. திரு. கி. எத்திராசன்
12. திரு. துரை கிருஷ்ணமூர்த்தி
13. திரு. வி. கோ. செல்லப்பா
14. திரு. சு. திருமலைச்சாமி கவுண்டர்
15. திரு. கே. வி. வேணுகோபால்.
16. திரு. ம. ஆபிரகாம்
17. திரு. பரிதி இளம்வழுதி
18. திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்

பேரவை விதி 279 (1)-ன் கீழ், திரு. கி. எத்திராசன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

5. கவன ஈர்ப்புகள்.

(அ) சென்னை நகரில் வீட்டிற்கான மின்னிணைப்பு கொடுப்பதில் ஏற்படுகின்ற கால தாமதம் குறித்து.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை மாநகரத்தில் வீட்டிற்கான மின் இணைப்புக் கோரி விண்ணப்பித்தவர்கள் அதற்கான முழுத் தொகையினை செலுத்தி நீண்ட நாட்களாகியும் மின் இணைப்புக் கிடைக்க போதிய மின் கேபிள்கள், மின் மீட்டர்கள் இல்லாத காரணத்தால் சென்னை மாநகர மக்களுக்கு ஏற்படுகின்ற இன்னல்கள் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :—

அறிக்கை.

மனுதாரர்கள் ஈட்டுத் தொகை செலுத்தியும் மின் இணைப்பு பெறாத வகை வீட்டு மின் இணைப்பு மனுக்கள் 7,400 சென்னை நகரில் உள்ளன. இவற்றில் 5,300 மனுக்கள் மூன்று மாதங்களுக்கு குறைவான நிலுவையில் தான் உள்ளன.

1985–86 ஆம் நிதி ஆண்டில், மின்வாரியம் 28,000 மனுதாரர்களுக்கு வீட்டு இணைப்பு கொடுத்தது.